# கொழும்புப் பல்கலைக்கழகம்

## கலைப்பீடம்

## முதலாம் வருட கலைமாணிப்பரீட்சை (பொருளியல்) 2017/2018

### இரண்டாம் அரையாண்டுப் பருவ இறுதிப்பரீட்சை

### ECN 1204: உலகப் பொருளாதார அபிவிருத்தியும் இலங்கையும்

நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

---

01.

i. அபிவிருத்திச் செயன்முறையின் மீதான விவசாயப் புரட்சியின் தாக்கத்தினை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(10 புள்ளிகள்)

ii. பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

02.

i. உலகத்தில் கைத்தொழில் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த காரணிகளை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(10 புள்ளிகள்)

ii. பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

03.

i. சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தினால் எதிர்நோக்கப்படும் சவால்களை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(10 புள்ளிகள்)

ii. சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தினால் முன்மொழியப்பட்ட அபிவிருத்திக் கொள்கைகளை நுணுக்கமாகப் பரிசீலிக்குக. இக்கொள்கைகள் சுதந்திர சந்தைப் பொருளாதாரத்திற்கு மாற்றான அணுகுமுறைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன?

(15 புள்ளிகள்)

04.

i. பிரித்தானிய ஆட்சியின் கீழ் இலங்கையில் நிலவிய ஆட்சிச் செயன்முறையின் வடிவத்தினை நீர் எவ்வாறு விளக்குவீர்?

(10 புள்ளிகள்)

ii. பிரித்தானிய ஆட்சியின் கீழ் இலங்கைப் பொருளாதாரத்தில் இடம்பெற்ற மாற்றங்களை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

05. " பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு பொருளாதாரத்தின் தொகை ரீதியான (Quantitative) சாதனையாக இருக்கும் அதேவேளையில் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒரு பொருளாதாரத்தின் தர ரீதியான (Qualitative) சாதனையாக காணப்படுகின்றது".

i. பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பனவற்றின் குறிகாட்டிகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. இலங்கைப் பொருளாதாரத்தின் கணிய மற்றும் தர ரீதியான சாதனைகளை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.
(15 புள்ளிகள்)

06. "சுதந்திரம் அடைந்தபோது இலங்கை விரைவான பொருளாதார வளர்ச்சியினையையும் அபிவிருத்தியையும் அடையக்கூடிய சாதகமான ஆரம்பகட்ட நிலைமைகளைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது"

i. சுதந்திரம் அடைந்த போது இலங்கையினால் அடைந்து கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட நிலைமைகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. அவ்வாறான நிலைமைகளை இலங்கை ஏன் நீண்டகாலத்தில் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை என்பதனை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.
(15 புள்ளிகள்)

07. "1956-1977 காலப்பகுதியில் இலங்கை பிரதானமாக மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையினைக் கடைப்பிடித்தது"

i. இலங்கை கடைப்பிடித்த மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் இரண்டு பிரதான சிறப்பம்சங்களை விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. இலங்கை கடைப்பிடித்த இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.
(15 புள்ளிகள்)

08. "1977 ஆம் ஆண்டில் உடனடியாகவே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பொருளாதாரத்தினைத் தாராளமயப்படுத்துவதற்கான கொள்கைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியது"

i. இலங்கையில் திறந்த பொருளாதாரத்தின் கொள்கை நடைமுறைகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் விரும்பப் பட்ட விளைவுகளை அடைந்து கொண்டதா என்பதனை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.
(15 புள்ளிகள்)

09. " உலக வங்கி மற்றும் ஏனைய சர்வதேச மூலங்களின் படி தற்போது இலங்கை அதிகளவான பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்குகின்றது"

i. இப்பொருளாதார் சவால்கள் யாவை" அவற்றில் ஆகக்குறைந்தது இரண்டு பற்றி விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அவ்வாறான சவால்களிலிருந்து மீள்வதற்கான உமது கொள்கைப் பரிந்துரைகள் யாவை?
(15 புள்ளிகள்)

------------------முற்றும்------------------